RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2010

# தோழமைச் சீடர் சுந்தரரும் ஆட்கொண்ட அண்ணல் சிவபெருமானும்

ப. செல்வி [அ, *], சா. சரவணன் [அ]

[அ] சைவசித்தாந்தத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Sundarar, the Companion Disciple, and Lord Shiva

P. Selvi [a, *], S. Saravanan [a]

[a] Department of Saiva Siddhanta, University of Madras, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: ashasubbu72@gmail.com

Received: 20-06-2022
Revised: 20-09-2022
Accepted: 03-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

Sundarar also has the names Vanthondar (Firm disciple) and Thambiran Thozhan. He was the one who sang about Thiruthontar who was responsible for the creation of Periyapuranam. Thambiran was also known as a companion. Friendly actions form the article. Alala Sundarar was doing service to Lord Shiva at Thirukkayilai. He used to go to the garden every day, pluck flowers and offer it to the Lord. He performed the ritual of offering garlands to the Lord and standing with Sacred Ash. One day when he went to the garden, the two friends of Goddess Parvati, Aninthithai and Kamilini, came there. Sundarar was in love with both of them and enjoyed themselves. Therefore, there was a delay in taking the flower and going to the Shiva Shrine. Realizing this, Lord Shiva told them that to cherish the fullest of love they should go to earth and be born in Tamil Nadu. And from they can continue serving the Lord. Thus, the three came and were born in this world with the names Sundarar, Paravai Nachiyar, and Sangili Nachiyar.

**Keywords:** Sundarar, Lord Shiva, Thirukkayilai, Relationship

## முன்னுரை

சுந்தரர் சுந்தரருக்கு வன்தொண்டர் தம்பிரான் தோழன் என்ற பெயர்களும் உண்டு பெரியபுராணம் தோன்ற காரணமாக அமைந்த திருத்தொண்டர் குறித்துப்பாடியவர் இவரே தம்பிரான் தோழர் எனவும் அழைக்கப்பட்டார். நட்பு கொண்ட செயல்கள் கட்டுரையாக அமைகின்றது.திருக்கயிலையில் சிவபெருமானுக்கு ஆலால சுந்தரர் என்பவர் தொண்டு செய்து கொண்டிருந்தார். அவர் நாள்தோறும் நந்தவனத்திற்கு சென்று பூக்கொய்து வந்து இறைவனுக்கு அளித்து வந்தார். இறைவனுக்கு மாலை தொடுத்து கொடுத்தலும் திருநீற்று மடல் ஏந்தி நிற்றலும் ஆகிய தொண்டினை மேற்கொண்டிருந்தார். ஒருநாள் அவ்வாறு நந்தவனத்திற்குச் சென்ற போது பார்வதி தேவியாரின் தோழியர்கள் ஆகிய அநிந்திதை, கமிலினி ஆகிய இருவரும் அங்கு வந்திருந்தனர். சுந்தரர் இருவரையும்காதல் கொண்டு மகிழ்ந்திருந்தார். அதனால், மலர் எடுத்துக் கொண்டு சிவ சன்னிதானத்தில் செல்வதில் கால தாமதம் ஆயிற்று. இதனை உணர்ந்த சிவபெருமான் உங்கள் அன்பு கனிவதற்குபூவுலகில்மக்களாகப்பிறத்தலே தகுதி நீங்கள் மூவரும் தமிழ்நாட்டில் தோன்றி ஒன்றுபட்டுக் காதல் புரிந்து நம் தொண்டும் செய்து விட்டு வாருங்கள் என்றருளி அனுப்பினார். அவ்வாறு அம்மூவரும் சுந்தரர், பரவை நாச்சியார் மற்றும் சங்கிலி நாச்சியார் என்ற பெயர்களுடன் இவ்வுலகில் வந்து பிறந்தனர்.

## தடுத்தாட்கொள்ளுதல்

இறைவன் திருவுள்ளப்படியே ஆலால சுந்தரர் தமிழ்நாட்டில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னும் தலத்தில் ஆதி சைவ அந்தணராக அவதரித்தார். தந்தையார் சடையனார், தாயார் இசைஞானியார். நம்பியாரூரர் என்ற திருநாமத்தோடு வளர்ந்தார். சிற்றரசராகிய நரசிங்க முனையர் சுந்தரை வளர்ப்புப் பிள்ளையாக ஏற்று போற்றி வளர்த்து வந்தார். மணப் பருவம் அடைந்த நம்பியாரூராருக்கு புத்தூர் என்னும் ஊரிலுள்ள சடங்கவி சிவாச்சாரியாருடைய திருமகளை மணம் செய்விப்பதாக நிச்சயம் செய்தனர்.

"ஒவணம்மேல் எருதொன்று ஏறும்

ஒணகாந்தன் தளியுளார்தாம்

ஆவணஞ்செய்து ஆளுங்கொண்ட

எருதொன்று"

திருமண நாளில் சிவபெருமான் சென்று சுந்தரரை தடுத்தாட் கொண்டார் பின் சுந்தரர் தல யாத்திரை மேற்கொண்டார் (Natarajan, 2019).

"பித்தா பிறைசூடி பெரு

மானேயருளாளா

எத்தால் மறவாதே நினைக்கின்றேன்

மனத் துன்னைக்"

திருவதிகை தலத்தில் இறைவனால் திருவடி சூட்டப் பெற்றார். சிதம்பரத்தில் கூத்தப் பெருமானை தரிசித்தார். இறைவன் சுந்தரரை திருவாரூருக்கு வா என்று அழைத்தார். அதன்படி திருக்கோயில் சென்று வன்மீகநாதரை வழிபட்டார். அப்பெருமான் நீ எனக்குத் தோழன் என்றும் நீ மணக்கோலத்தோடு இருப்பாயாக என்றும் கட்டளை இட்டு அருளினார் (Natarajan, 2010). தம்பிரான் தோழர் என்ற நாமம் நம்பியாரூரார்க்கு அமைந்தது.

"வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழித்தேன்

விளங்கும் குழைக்காதுடை வேதியனே"

உமையம்மையாரின் கட்டளைப்படி கமலினி திருவாரூரில் பரவை நாச்சியாராகவும், அநிந்திதை திருவொற்றியூரில் சங்கிலியராகவும் பிறந்தனர். இறையருளால் பரவையாரையும் சங்கிலி நாச்சியாரையும் மணம் புரிந்தார் (Narayana Velupillai, 2010).

## இறைவன் நடத்திய செயல்கள்

குண்டையூர் கிழார் என்பவர் சிவபெருமான் அருளால் தொண்டருக்கு வழங்கும் பொருட்டு மிகுதியான தானியங்களை வைத்திருந்தார்.திருவாரூருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமே என்று நம்பியாரூரர் எண்ணினார் சிவபெருமான் ஏவலால் பூதங்கள் நெல் முழுவதையும் திருவாரூர் கொண்டு சேர்த்தன. பரவையார் பங்குனி உத்திர திருநாளுக்கு பொன் வேண்டும் என்று கூறினார். வன்தொண்டர் திருப்புகலூருக்கு சென்று திருக்கோயிலுள் இருந்த கற்களை தலையணையாக வைத்து சிறிது துயின்று எழுந்து பார்த்தார். கற்கள் எல்லாம் பொன்னாக மாறி இருப்பதைக் கண்டார்.

திருமுதுகுன்றத்திற்குச் சென்று முதுகுன்றர் அருளால் பன்னிரெண்டாயிரம் பொன் கிடைத்தது. அதனை திருமணிமுத்தாறு நதியிலிட்டு, அப்பால் திருவாரூர் சென்று அங்குள்ள கமலாலயத்தில் இருந்து பொன்னை எடுத்து பரவையாருக்கு வழங்கினார். திருக்குருகாவூர் என்ற தலத்தில் சிவபெருமான் அளித்த பொதிசோறு உண்டார். தொண்டை நாட்டுத் தலங்களை தரிசிக்கையில் திருகச்சூரில்,

"ஆலைக் கழனிப் பழனக்கச்சூர்

ஆலக் கோயில் அம்மானே" 4

சிவபெருமான் பிச்சை எடுத்து வந்த உணவை உண்டார்.சங்கிலியாரை திருமணம் செய்தார்.நான்உன்னை என்றும் பிரியேன் என்று சங்கிலியாருக்கு சபதம் செய்து கொடுத்தார். அதற்கு மாறாக திருவாரூர் சிவபெருமானை காணும் பொருட்டு சங்கிலியாரைப்பிரிந்து சென்றார். அவரின் கண்கள் இரண்டும் ஒளி இழந்தன.

"அடையும் கழனிப் பழனக்கச்சூர்

ஆலக் கோயில் அம்மானே".

## ஊன்றுகோல் பெறுதல்

கண்களை இழந்து வருத்தமுற்ற நம்பியாரூரர் திருவெண்பாக்கம் கோயிலை அடைந்து, இறைவனை வேண்டவே ஊன்றுகோல் ஒன்றை கொடுத்தருளினார்.

"ஈன்றவனே வெங்கோயில்

இங்கிருந்தா யோஎன்ன"

## இடக்கண் பெறுதல்

காஞ்சிபுரத்தை அடைந்து இறைவனை வேண்டியதால் கச்சி ஏகாம்பர் இடக்கண் பார்வை கொடுத்தருளினார்.

## உடற்பிணி நீங்கப் பெறுதல்

உடற்பிணியால் வருத்தமுற்ற சுந்தரர் திருத்துருத்தியைஅடைந்தார்.இறைவனிடம் வேண்டி உடற்பிணி நீங்கப் பெற்றார்.

"அடியிணை தொழு தெழும் அன்பராம் அடியார்

சொன்னவாறு அறிவார் திருத்தியார் வேள்வி"

## வலக்கண் பெறுதல்

திருவாரூர் இறைவனை வேண்டி வலக்கண் பார்வையையும் பெற்றார்.

"பறக்கும் எம் கிள்ளைகாள்

பாடும் எம் பூவைகாள்

அறக்கண் என்னத் தகும்

அடிகள் ஆரூரரை"

## பரவையார் சீற்றம்

சங்கிலியார் திருமணத்தால் பரவையார் கோபம் கொண்டார். சுந்தரருடன் வாழ மறுத்தார். சுந்தரர் இறைவனை வேண்டினார்.

## ஆரூரன் தூது அனுப்புதல்

தோழனே நான் இப்போது உனக்கு ஒரு தூதன் ஆகி பறவை வீட்டுக்கு போகின்றேன். நீ உன் துன்பத்தை ஒழி என்று ஆதிசைவர் வடிவம் தாங்கி தூது சென்றார். பரவையார் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை அவரிடம் தெரிவித்தபோது உயிர் இனி தரியேன் என சுந்தரர் வருந்தினார் (Saravanan, 2017). மீண்டும் இறைவன் சுந்தரரிடம், பரவையாரிடம் தூது செல்கிறேன் என கூறி சென்றார். வந்திருப்பவர் சிவபெருமான் என தெரிந்து கொண்ட பரவையார் மகிழ்ந்து சுந்தரரை ஏற்றுக்கொண்டார். சுந்தரரிடம் சென்று பரவையார் கோபம் இல்லை தெரிவித்து சுந்தரர் பரவையார் சேர்ந்து வாழ தோழராக இருந்து இறைவன் உதவினார்.

"ஊன்று கோல் எனக்கு ஆவ தொன்று அருளாய்

ஒற்றி ஊர்எனும் ஊர் உறைவானே"

"ஆலைக் கழனிப் பழனக்கச்சூர்

ஆலக் கோயில் அம்மானே"

## முதலை உண்ட பாலனை மீட்டல்

அவிநாசியில் திருக்கோயில் தரிசிக்க செல்லும் போது அழுகுரல் ஒரு வீட்டில் இருந்து வந்தது. சென்ற ஆண்டு இறந்த பாலன் வீட்டிலிருந்து அழுகுரலைக் கேட்டு அவிநாசி இறைவனை வேண்டி முதலையின் வயிற்றில் இருந்த புதல்வன் உடம்பை சென்ற ஆண்டில் இருந்த வளர்ச்சியுடையதாக செய்து அவனது உடம்பில் உயிரை புகச் செய்தார். பின் சேரமான் பெருமான் உடன் மலைநாடு சென்று மகிழ்ந்தார்.

## திருக்கயிலைக்கு எழுந்தருளுதல்

திருவிஞ்சைக்களம் பதியினை அடைந்து வெறுத்தேன், மனைவிட்டு ஒழித்தேன் என்று இறைவனிடம் எடுத்து உரைத்தார்.

"ஈன்றவனே வெங்கோயில்

இங்கிருந்தா யோஎன்ன"

இறைவன், தேவர்களுடன் வெள்ளை யானையை திருவிஞ்சைக்களத்திற்கு அனுப்பியருளினார் .சுந்தரர் வெள்ளை யானை மீதமர்ந்து கயிலைக்கு புறப்பட்டார். இதனை உணர்ந்த சேரமான் பெருமானும் குதிரை மேல் ஏறினார் முதலில் அவர் செல்லவே, இறைவன், நான் அழையாதிருக்க நீர் வந்தது ஏன் என வினவினார். நினது திருவருள் பெருவெள்ளம் ஈர்க்கவே திருமுன் வரப்பெற்றேன் என்று பதிலளித்தார் சேரமான் (Dharumai Adheenam, 2007). நின்னை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருக்கைலாய ஞான உலா பாடி வந்தேன் ஏற்றருளுக என்றார். சிவபெருமானும் ஏற்று அருள் புரிந்தார்.

சுந்தரர் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டு புரியும் ஆலால சுந்தரர் ஆகவும் சேரமான் சிவகணத்தலைவராகவும் தொண்டு புரிந்தனர் .நம்பியாரூரர் மாதொரு பாகனை கண்டு போற்றி திருவருள் இன்பத்தில் திளைத்து மகிழ்ந்தார். திருவாரூரில் பரவையாரும் திருவொற்றியூரில் இருந்த சங்கிலியாரும் தங்கள் காலத்தை முடித்துக் கொண்டு கைலாயத்தை அடைந்து முன்போல் கமலினி ஆகவும்அநிந்திதையாகவும் மாறிதேவிக்கு தொண்டு செய்யும் நிலையை அடைந்தனர்.

## முடிவுரை

இறைவனுடன் சுந்தரர் தோழமை நெறியில் பழகினார். இறைவனும் வேண்டியதை தருபவர், தம்மை என்நிலையில் வைத்து வணங்கினாலும் உதவுபவர். தோழர் எவ்வாறோ அவ்வாறே இறைவன் சுந்தரருக்கு தோழமையுடன் உறவு கொண்டு முக்தியளித்தார்.

## References

Dharumai Adheenam, (2007) Thiruvaru sethi, Manivasagar Pathippagam, Chennai, India.

Narayana Velupillai, (2010) Sundaramurthi Swamigal Aruli Seitha Thevaram, Varthamanan Pathippagam, Chennai, India.

Natarajan, P.R., (2010) Periya Puraanam (Moolamum Uraiyum), Uma Pathippagam, Chennai, India.

Natarajan, P.R., (2019) Sundar Tevaram, Uma Pathippagam, Chennai, India.

Saravanan, S., (2017) Siddhanta Perumandram Thingaethal, Malar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License